/நகல்/

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

பொதுப்பணிகள் – வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணிநியமனம் – முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கு இடையேயான 1:4 என்ற விகிதாச்சாரம் 200 புள்ளி இனச்சுழற்சி முறையுடன் கடைபிடித்தல் – தெளிவுரை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை

அரசாணை (நிலை) எண்.20

நாள்.12.2.2008
சர்வஜித்–தை–29
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.398, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள்.13.9.1990.
2. அரசாணை (நிலை) எண்.241, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள்.29.10.2007.
3. தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் கடித எண்.3234/த1/2007, நாள்.26.12.2007.

----

ஆணை:

1. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கு இடையே, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணி நியமனங்கள் மேற்கொள்ளும்போது 1:4 விகிதாச்சாரம் கடைபிடிக்க வேண்டும் என ஆணையிடப்பட்டது. மேலும் பணிநியமன அதிகாரி, காலிப்பணியிடங்களை நிரப்பிடும்போ மேற்கூறப்பட்ட 1:4 என்ற விகிதாச்சாரத்தோடு இனச்சுழற்சி விதியினையும் மகளிர் மற்றும் ஊனமுற்றோருக்கான இடஒதுக்கீடு விதியினையும் உடனிகழ்வாக ( Simultanecus Application ) பின்பற்ற வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 200 புள்ளி இனச்சுழற்சி முறை நிர்ணயம் செய்யப்பட்டு, ஏனைய இனத்தவர்களுக்கிடையே கிறிஸ்துவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தலா 3.5 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்பட் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர், தற்போது முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக் 1:4 என்ற விகிதத்தில் இதுகாறும் நியமனங்கள் செய்யப்பட்டு வந்தன எனவும்,

..2.

தற்போது 200 பேர் கொண்ட இனச்சுழற்சிமுறை உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஆணையில் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் முன்னுரிமை மற்றும் முன்னுரிமையின்மை ( Priority / Non Pricroty ) எந்த இடத்தில் எப்படி அளிப்பது என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்து, இது குறித்து தெளிவுரை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டார்.

4. மேற்கண்ட கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணிநியமனங்கள் மேற்கொள்ளும்போது, முன்னுரிமை பெற்றோர் மற்றும் முன்னுரிமையற்றோருக்கான 1:4 என்ற விகிதாசாரத்தோடு உடனிகழ்வாக ( Simultaneous Application ) இனச் சுழற்சி முறையையும் பின்பற்ற வேண்டும் என்றும், மேற்சொன்ன 1:4 என்ற விகிதாச்சாரத்தைப் பொதுப்போட்டி, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் (BC கிறிஸ்தவர்கள் மற்றும் BC முஸ்லீம்கள் தவிர,), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் (கிறிஸ்தவர்கள்), பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்கள்), மற்றும் பழங்குடியினர் ஆகிய இனங்களில் ஒவ்வொரு இனத்திலும் முதலிடம் முன்னுரிமை பெற்றோருக்கும் அதே இனத்தைச் சார்ந்த அடுத்துவரும் நான்கு இடங்கள் முன்னுரிமையற்றோருக்கும் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் எனவும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு பகுதி மாற்றம் செய்து ( Partial Modification ) அரசு முடிவு எடுத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இதன்படி முன்னுரிமை பெற்றோருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான 1:4 என்ற விகிதாச்சாரம் இனவாரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறை இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி. ஸ்ரீதர்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் துறைச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை.9
அனைத்துத் தலைமைச் செயலக (அ.ந.மு) துறைகள், சென்னை.9
அனைத்துத் துறைத் தலைவர்கள் / தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை.6
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை.32
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை.104
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள்.

நகல்:
செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர், சென்னை.9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்), சென்னை.9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (பள்ளிக்கல்வி), சென்னை.9
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலம்), சென்னை.9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அனைத்து பிரிவுகள் சென்னை.9

// உண்மை நகல் //

ஜி.வி.7.3.08

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்